# Tamil Nadu Electricity Board Engineers' Association

(Recognized in G.O. No.854 dated 06-04-1946)

Regn. No.217/94

"Electricity Avenue", 144, Anna Salai, Chennai - 600 002. Association : 044 28520731

E-mail : tnebea@gmail.com Web : www.tnebengineers.in


## நான்காவது பொதுக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

இடம்: ஏற்காடு நாள்: 11.08.2024

**தீர்மானம். (1):**

உதவிப் பொறியாளர் பதவியில் சுமார் 1200 பணியிடங்கள் தற்போது காலியாக உள்ளதால் மின் மாற்றிகள் மற்றும் மின்பாதைகள் பராமரிப்பில் கணிசமான தொய்வு ஏற்பட்டு – மின் நுகர்வோர் நலன் பெரிதும் பாதிப்புக்கு இலக்காகி உள்ளது. ஒப்புக் கொள்ளப்பட்ட வேலைப் பளுவின்படி போதுமான அளவில் களப்பணியாளர்கள் இல்லாததால் எக்காலத்திலும் இல்லாத அளவுக்கு மின் விபத்து மிகுந்து காணப்படுகிறது. மேலும் வட சென்னை அனல் மின் நிலையம்-3 மற்றும் உடன்குடி ஆகிய புதிய மின் திட்டங்களை விரைந்து முடித்து மின் இயக்கத்திற்கு கொண்டு வருவதற்கு துடிப்புடன் பணியாற்றக் கூடிய தொழில் நுட்ப வல்லமை பொருந்திய புதிய உதவிப் பொறியாளர்கள் தேவைப்படுகிறது. இவ்வாறு காலிப் பணியிடங்கள் கணிசமாக இருப்பதன் காரணமாக அடுக்கடுக்கான இன்னல்களை அனைத்து மட்டத்திலும் உள்ள பொறியாளர்கள் பலரும் சந்திக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

- பலரும் கூடுதல் பொறுப்பினை ஓராண்டுக்கும் மேலாக சுமந்து வருகின்றனர்.
- ஒரே அலுவலர் மூன்று பிரிவுகளை கண்காணிக்கும் நிலையும் பல இடங்களில் நிலவுகிறது.
- விருப்ப மாறுதல் பெற்ற உதவிப் பொறியாளர்கள் விரும்பிய இடத்தில் பணியில் சேர்ந்து பணியாற்றுவதற்கு ஏதுவாக உடனடி விடுவிப்பு மறுக்கப்படுகிறது. குறிப்பாக குந்தா மற்றும் காடம்பாறை புனல் மின் வட்டங்களில் பணியாற்றும் உதவிப் பொறியாளர்கள் மாறுதல் பெற்று மூன்று ஆண்டுகளுக்கு மேலாகியும் விடுவிக்கப்படாமல் அவர்களின் திருமணங்களே கைகூடாமல் தள்ளிச் செல்கின்றன.
- உதவி செயற் பொறியாளர்களின் பணியிடங்கள் காலியாக இருந்தும் உதவிப் பொறியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதில் கால தாமதம் ஏற்படுகிறது.
- அனைத்துக்கும் மேலாக உதவி செயற் பொறியாளர்களே காலியாக உள்ள உதவிப் பொறியாளர்களின் பணியிடங்களை கண்டிப்பாக கூடுதல் பொறுப்பு ஏற்று பணியாற்ற வேண்டும் என்ற இழி நிலையும் திணிக்கப்பட்டுள்ளது.

2020-ஆம் ஆண்டு பிப்ரவரியில் நேரடி நியமனத்தின் மூலம் 600 உதவிப் பொறியாளர்களின் தேர்வுக்கு செய்தித் தாள்களில் அறிவிக்கை வெளியிடப்பட்டு – சுமார் 85000 பொறியாளர்கள் வேலை வாய்ப்பு நாடி கணினி வாயிலாக விண்ணப்பித்து எழுத்துத் தேர்வில்

வென்றிட இரவு பகலாக கடுமையாக படித்து வந்த நிலையில் – 2021-ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியிலும் மே மாத முதலிலும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட எழுத்துத் தேர்வுகள் சட்டப் பேரவைத் தேர்தல் காரணமாக தள்ளி வைக்கப்பட்டன. அடுத்து பொறுப்பேற்ற புதிய அரசு நேரடி நியமனத் தேர்வுகளை தமிழ் நாடு பணியாளர் தேர்வாணையம் இனி மேற்கொள்ளும் என்று கொள்கை முடிவெடுத்து அறிவித்து மூன்று ஆண்டுகள் கடந்தும் – தள்ளி வைக்கப்பட்ட எழுத்துத் தேர்வுக்கு மீண்டும் நாள் குறிப்படாமல் பழைய அறிவிக்கை ஒட்டு மொத்தமாக இரத்து செய்யப்பட்டதே அன்றி – சிறு அளவிலான முன்னேற்றம் கூட இதுகாறும் இல்லாமல் இருப்பது பெருத்த ஏமாற்றம் தருகிறது.

ஐந்து ஆண்டுகளாக உதவிப் பொறியாளர் நேரடி நியமனம் முற்றிலும் இல்லாத நிலையில் சுமார் 2000 டிப்ளமோதாரர்களுக்கு மட்டில் பதவி உயர்வு வழங்கப்பட்டு விகிதாச்சார விதி மீறலும் நடந்துள்ளது.

எனவே மக்கள் நலன் காக்கவும் மின் கழக நலன் காக்கவும் மின்னியல் பிரிவில் 1000 உதவிப் பொறியாளர்களையும் சீரியல் பிரிவில் 200 உதவிப் பொறியாளர்களையும் மற்றும் எந்திரவியல் பிரிவில் 200 உதவிப் பொறியாளர்களையும் நேரடி நியமனத்தின் மூலம் தேர்வு செய்து விரைவில் பணியில் அமர்த்திட உரிய ஆணை பிறப்பிக்குமாறு **போற்றுதலுக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களையும்** மதிப்பிற்குரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களையும் த.நா.மி.வா. பொறியாளர் கழகத்தின் பொதுக் குழு கனிவுடன் வேண்டுகின்றது.

**தீர்மானம். (2):**

உத்தரப் பிரதேச மாநிலத்தில் புனலுக்கென்று ஒன்றும் அனலுக்கென்று ஒன்றும் தனித் தனியாக பிரித்து நிறுவப்பட்ட மின் கழகங்களை ஒன்றிணைத்து இனி மின் உற்பத்திக்கு ஒரே மின்கழகம் தான் என்று அம்மாநில அரசு அண்மையில் முடிவெடுத்துள்ளது. ஆனால் தமிழ் நாட்டில் மாறாக ஒன்றாக இருந்ததை கூறு போட்டு பல்வேறு கழகங்களாக பிரித்து நிறுவி எதிர் திசையில் பயணிப்பது அவசியமற்ற முயற்சி என்பதை பணிவுடன் சுட்டிக் காட்டி மீண்டும் ஒன்றிணைக்கும் வண்ணம் மறு பரிசீலனை செய்யுமாறு **போற்றுதலுக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களையும்** த.நா.மி.வா. பொறியாளர் கழகத்தின் பொதுக் குழு கனிவுடன் வேண்டுகின்றது.

**தீர்மானம். (3):**

அனைத்து மின் கழகங்களுக்கும் பொதுவாக ஒரே ஒரு இந்திய ஆட்சிப் பணி அலுவலர் மட்டில் தலைவராக இருந்தாலே போதுமானது. மேலாண்மை இயக்குநர் பொறுப்பில் தமிழ் நாடு மின்சார வாரியத்தில் பல்லாண்டுகளுக்கு முன்னர் பணியில் இணைந்து முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக சீரிய அனுபவம் பெற்றுள்ள தலைமைப்

பொறியாளர்களே மிகவும் தகுந்தவர்களாக இருக்க முடியும் என்ற கருத்தை பணிவுடன் சுட்டிக் காட்டிட விழைகின்றோம். மைய அரசின் பொதுத் துறை நிறுவனங்களில் சிறந்த அனுபவம் பெற்ற பொறியாளர்களே தலைவர்களாகவும் மேலாண்மை இயக்குநர்களாகவும் அடையாளம் காணப்பட்டு பணியமர்த்தப் படுகின்றனர் என்ற மரபு சார்ந்த வழிகாட்டுதலையும் தங்களின் சீரிய கவனத்திற்கு கொண்டு வருகிறோம். எனவே மின் கழகங்களின் மேலாண்மை இயக்குநர் பொறுப்பிற்கு தகுந்த பொறியாளர்களை அடையாளம் கண்டு பணியமர்த்துமாறு **போற்றுதலுக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களையும்** த.நா.மி.வா. பொறியாளர் கழகத்தின் பொதுக் குழு கனிவுடன் வேண்டுகின்றது.

**தீர்மானம். (4):**
தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ் நாடு மின் தொடரமைப்புக் கழகம் ஆகிய இரு கழகங்களிலும் உள்ள மேலாண்மை இயக்குநர் மற்றும் தொழில் நுட்ப இயக்குநர்கள் பணியிடங்கள் அனைத்துமே இன்றைய நிலையில் காலியாக உள்ளன. புதிய மின் கழகங்களிலும் காலியாக உள்ளன. அனைத்து மேலாண்மை இயக்குநர்கள் மற்றும் தொழில் நுட்ப இயக்குநர்கள் பணியிடங்களையும் தகுந்த பொறியாளர்களை அடையாளம் கண்டு பணியமர்த்துமாறு **போற்றுதலுக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களையும்** த.நா.மி.வா. பொறியாளர் கழகத்தின் பொதுக் குழு கனிவுடன் வேண்டுகின்றது.

**தீர்மானம். (5):**
பணியிடங்கள் ஏராளமாக காலியாக இருந்தும் பதவி உயர்வுப் பட்டியல்களுக்கு ஒப்புதல் தருவதிலும் தொடர்ந்து பணி அமர்த்தல் ஆணைகள் வழங்குதலிலும் கணிசமாக கால தாமதம் காணப்படுகிறது. பதவி உயர்வில் காணப்படும் கால தாமதத்தால் மின்னியல், சீரியல் மற்றும் எந்திரவியல் ஆகிய அனைத்துப் பிரிவுகளையும் சார்ந்த பொறியாளர்கள் மத்தியில் மிகுந்த ஏக்கமும் சுணக்கமும் எழுந்துள்ளது. ஏக்கத்தை தணிக்கும் முகத்தான் காலியாக உள்ள அனைத்து உதவி செயற் பொறியாளர்கள் / செயற் பொறியாளர்கள் / மேற்பார்வைப் பொறியாளர்கள் / தலைமைப் பொறியாளர்கள் பணியிடங்களுக்கான பதவி உயர்வினை விரைந்து வழங்கி ஊக்கம் நல்குமாறு **போற்றுதலுக்குரிய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களையும்** மதிப்பிற்குரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களையும் த.நா.மி.வா. பொறியாளர் கழகத்தின் பொதுக் குழு கனிவுடன் வேண்டுகின்றது.

**தீர்மானம். (6):**

2000-ஆம் ஆண்டு டிசம்பரில் 200 உதவிப் பொறியாளர்களையும் 2001-ஆம் ஆண்டு மார்ச்சில் 100 உதவிப் பொறியாளர்களையும் தமிழ் நாடு மின்சார வாரியத்தில் முதல் முறையாக எழுத்துத் தேர்வில் பெறும் மதிப்பெண்களை மட்டில் அளவுகோலாக கொண்டு திறமை அடிப்படையில் தேர்வு செய்து நேரடி நியமனத்தின் மூலம் அப்போதிருந்த வாரியத் தலைவர் மதிப்புமிகு பூர்ணலிங்கம், இ.ஆ.ப அவர்கள் பணியமர்த்தினார்கள். வாரியப் பணியில் உள்ளோருக்கும் எழுத்துத் தேர்வில் அமர்ந்து பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் உள் முகத் தேர்வின் வாயிலாக பணி நியமனம் பெற்றிட இணையாக உரிய வாய்ப்பினை வாரியத் தலைவர் அவர்கள் வழங்கியும் அவர்கள் பயன்படுத்திட மறுத்து நீதி மன்றம் சென்று தடையாணை பெற்றதால் உள்முக நியமனம் தடைபட்டது. தொடர்ச்சியாக வாரியத்திற்கு நெருக்கடி தந்து 2001-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் எழுத்துத் தேர்வினை இரத்து செய்த பின்னர் 2002-ஆம் ஆண்டு மே மாதத்தில் உள்முகத் தேர்வின் மூலம் 464 நபர்கள் உதவிப் பொறியாளர்களாக பணியில் சேர்ந்தனர்.

உள்முகத் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட்ட உதவிப் பொறியாளர்கள் சிலர் நேரடி நியமனத்தின் மூலம் நியமிக்கப்பட்ட உதவிப் பொறியாளர்களுக்கு மேலே அல்லது உடன் மூப்புப் பட்டியலில் இடங்கோரி 14 வழக்குகளை தொடுத்தனர். அனைத்து வழக்குகளையும் மாண்புமிகு சென்னை உயர் நீதி மன்றம் 31.08.2010 அன்று தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது.

இரு வகையினருக்கும் இடையிலான மூப்புப் பட்டியல் தொடர்பான மேல்முறையீடு மாண்புமிகு இரு நீதியரசர்கள் கொண்ட ஈராயம் மார்ச் மாதத்தில் விசாரித்து தீர்ப்பினை நாள் குறிப்பிடாமல் தள்ளி வைத்துள்ளது.

வாரிய நிலைப்பாட்டினை நிலை நிறுத்தி எழுத்துத் தேர்வின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்ட நேரடி நியமனப் பொறியாளர்களுக்கு செயற் பொறியாளர்களாக விரைவில் பதவி உயர்வு கிடைக்கும் வண்ணம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு **போற்றுதலுக்குரிய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களையும்** மதிப்பிற்குரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களையும் த.நா.மி.வா. பொறியாளர் கழகத்தின் பொதுக் குழு கனிவுடன் வேண்டுகின்றது.

**தீர்மானம். (7):**

உதவி செயற் பொறியாளர் பணியிடங்கள் கணிசமாக காலியாக இருந்தும் 2008-ஆம் ஆண்டில் நேரடி நியமனத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்ட உதவிப் பொறியாளர்களுக்கு சுமார் 16 ஆண்டுகள் முடிந்த நிலையிலும் உதவி செயற் பொறியாளர்

என்ற முதல் பதவி உயர்வே கிட்டிட வில்லை. ஒப்புதல் அளிக்கப்பட்ட முந்தைய பதவி உயர்வுப் பட்டியலில் எஞ்சியிருந்த அனைத்து உதவிப் பொறியாளர்களுக்கும் பணியமர்த்தல் ஆணைகள் உடனடியாக வழங்கிட மின் கழகத்திற்கு உரிய ஆணை வழங்கி எங்களுக்கு உதவிய **மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களை** த.நா.மி.வா. பொறியாளர் கழகத்தின் பொதுக் குழு நெஞ்சார்ந்த நன்றியுடன் வணங்கி மகிழ்கிறது. 2008-ஆம் ஆண்டில் நேரடி நியமனத்தின் மூலம் பணியமர்த்தப்பட்ட 27 உதவிப் பொறியாளர்கள் மட்டில் இன்னும் எஞ்சியுள்ளனர். அவர்களுக்கும் விரைவில் உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வு வழங்கிட உரிய அறிவுரை வழங்குமாறு **போற்றுதலுக்குரிய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களையும்** மதிப்பிற்குரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களையும் த.நா.மி.வா. பொறியாளர் கழகத்தின் பொதுக் குழு கனிவுடன் வேண்டுகின்றது.

**தீர்மானம். (8):**
ஐந்து ஆண்டுகளாக உதவிப் பொறியாளர்கள் நேரடி நியமனத்திற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுக்கத் தவறியது மின் கழகத் தலைமையே! இதன் காரணமாக காலிப் பணியிடங்கள் கணிசமாக கூடியதால் உதவிப் பொறியாளர்கள் பலர் பல மாதங்கள் தொடர்ந்து தனது பிரிவுடன் இன்னொரு பிரிவையும் கூடுதல் பொறுப்பு வகிக்கும் நிலைமை ஏற்பட்டதுடன் ஒருவரே மூன்று பிரிவுகளை நிர்வகிக்கும் அசாதாரண நிலையும் சில இடங்களில் ஏற்பட்டுள்ளது. கூடுதல் பொறுப்பு வகிக்கும் காலத்தில் முழுமையான கவனம் செலுத்த யாராலும் முடியாது என்பது இயல்பே என்றாலும் கவனச் சிதறலால் ஏற்படும் சிறிய வகை குறைபாடுகள் கூட பெரிதாக்கப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை வளையத்துள் தள்ளப்பட்டு தண்டணைக்கு இலக்காக வேண்டியுள்ளது. பல வகை இன்னல்களையும் களையும் தீர்வுக்கான ஒரே மருந்து உடனடி நேரடி நியமனம் மட்டிலே! ஆனால் முறையான தீர்வுக்கு முனைப்பு காட்டாமல் ஒவ்வொரு உதவி செயற் பொறியாளரும் ஒரு பிரிவு அலுவலகத்தை கூடுதல் பொறுப்பு வகிக்க வேண்டும் என்று நியாமற்று ஆணையிட்டு கட்டாயப்படுத்துவதை த.நா.மி.வா. பொறியாளர் கழகத்தின் பொதுக் குழு வன்மையாக கண்டிக்கிறது. பொறியாளர் கழகத்தின் 06.11.2023 நாளிட்ட மடலில் முன்னிலைப்படுத்தியுள்ள பல்வேறு நியாயமான காரணங்களை கருத்தில் கொண்டு Memo No.062900/G.11/G.111/2023-1, dt. 02.11.2023 என்ற குறிப்பாணை வாயிலாக தலைமைப் பொறியாளர்/ பணித் தொகுதி அவர்கள் வழங்கியுள்ள உதவி செயற் பொறியாளர்களின் பொறுப்பினை இழிவுபடுத்தும் அறிவுரையை உடனடியாக இரத்து செய்து உதவுமாறு மதிப்பிற்குரிய மின் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களை த.நா.மி.வா. பொறியாளர் கழகத்தின் பொதுக் குழு கனிவுடன் வேண்டுகின்றது.

**தீர்மானம். (9):**
தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் நிதி நிலைமை பாதிப்பு அடைய முக்கிய காரணியாக அமைவது வெளி சந்தையிலிருந்து அதிக விலைக்கு மின்சாரம் கொள்முதல் செய்வதே! முந்தைய நாட்களில் புதிய மின் உற்பத்தித் திட்டங்களை மின் வாரியமே வகுத்து – நிறுவி – இயக்கி வந்தது. 35 ஆண்டுகள் முழுமையாக முடிந்த பின்னரும் முழு உற்பத்தி திறனில் அவை இன்றும் சிறப்பாக இயங்கி வருகின்றன என்பது கண்கூடு. எனினும் அரசும் மின்சார வாரியமும் என்ன காரணத்தாலோ தன்னிறைவுக் கொள்கையிலிருந்து தடம் மாறி – தனியார் வரவுக்கு நல்வரவு கூறி – தடுமாறி – தத்தளித்து – இறுதியில் ஏமாந்து – இன்றைய தினம் தவிர்க்க முடியாத நிலையில் தனது மின் தேவைக்கு வெளிச் சந்தையை பெரிதும் நம்பி இருக்கும் அவல நிலையை எதிர் நோக்கியுள்ளது. இழப்பிற்கு மின் கழகப் பொறியாளர்களின் – பணியாளர்களின் வினைத் திறனில் குறைபாடு ஏதும் இல்லை; மின் கழகத் திட்டமிடலில் தான் எல்லா விதமான குளறுபடியும் மலிந்துள்ளது என்பதே உண்மை. எனவே "இழப்பிலுள்ள நிறுவனம்" என்று முத்திரை குத்தி இழப்பிற்கு எவ்வகையிலும் தொடர்பில்லாத பொறியாளர்கள் – பணியாளர்கள் பெற வேண்டிய நிதி சலுகைகளை மறுப்பது ஏற்புடையதல்ல! மாறாக, சமூக நலன் பேணும் அரசுத் துறைகளுக்கு இணையாக மின் கழகமும் கருதப்பட்டு அரசு அறிவிக்கும் அகவிலைப் படி உயர்வு உள்ளிட்ட அனைத்து நிதி சலுகைகளும் அவ்வப்போது தங்கு தடையின்றி நீட்டிக்கப்பட வேண்டும் என்பதே நியாயத்தின் பாற்பட்ட அணுகுமுறை ஆகும். மின் கழகப் பணியாளர்களை இரண்டாம் தரப் பணியாளர்களாக வகைப்படுத்தும் எரிசக்தித் துறையின் Letter (D) No.26, dated 11.07.2023 என்ற மடலை திரும்பப் பெறுவதற்கும் மின் கழகத் தலைமையின்பால் புதிதாக திணிக்கப்படும் "முன் அனுமதி" என்னும் கட்டுப்பாட்டை அடியோடு நீக்கவும் அதன் மூலமான (Per) FB TANGEDCO Proceedings No. 2, நாள்:1 2.04.2022 என்ற வாரிய ஆணையை ஒப்புக் கொண்ட வண்ணம் முற்றிலும் இரத்து செய்யவும் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு **போற்றுதலுக்குரிய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களையும்** மதிப்பிற்குரிய மின் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களையும் மற்றும் அனைத்து இயக்குநர்களையும் த.நா.மி.வா. பொறியாளர் கழகத்தின் பொதுக் குழு கனிவுடன் வேண்டுகின்றது.

**தீர்மானம். (10):**
(Per) CMD TANGEDCO Proceedings No.114 நாள்: 22.06.2017 என்ற வாரிய ஆணையில் மின்னியல் பிரிவில் 300 உதவிப் பொறியாளர்களையும் சீரியல் பிரிவில் 25 உதவிப் பொறியாளர்களையும் நேரடி நியமனத்தில் மூலம் தேர்வு செய்து

பணியமர்த்திட ஆணை வெளியிடப்பட்டது. 14.02.2018 நாளிட்ட அறிவிக்கை எண்: 1/2018-ன் வாயிலாக விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு 30.12.2018 அன்று எழுத்துத் தேர்வு நடைபெற்றது. நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகளால் தாமதமாகி முடிவுகள் 29.05.2019 அன்று தான் வெளியிடப்பட்டது. தேர்ச்சி பெற்றவர்கள் பட்டியலும் காத்திருப்போர் பட்டியலும் ஒரே நாளில் வெளியிடப்பட்டது. புதிய உதவிப் பொறியாளர்கள் 06/2019-ல் பணியில் சேர்ந்தனர். குறித்த காலத்திற்குள் பணியில் சேர தவறியவர்களுக்கு இணையாக காத்திருப்போர் பட்டியலிலிருந்து உரிய ஆணைகள் வழங்குவதில் சுமார் 7 மாதங்கள் கால தாமதம் ஏற்பட்டு விட்டது. 01/2020-ல் 16 உதவிப் பொறியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணியில் சேர்ந்துள்ளனர். மேலும் நீதிமன்றத் தீர்ப்புகளின் அடிப்படையில் கூடுதலாக 7 உதவிப் பொறியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணியில் சேர்ந்துள்ளனர். முந்தைய ஊதிய விகித மாற்றங்களின்போது ஊதிய விகித திருத்த நாளுக்கும் ஒப்பந்த நாளுக்கும் இடையில் பணியில் சேருவோருக்கும் ஊதிய விகித பலன் நீட்டிக்கப்படுவது காலங்காலமாக கடைபிடிக்கப்பட்ட மரபு ஆகும். ஆனால் தற்போதைய ஊதிய விகித மாற்றத்தில் "திருத்த நாளில் பணியிலிருப்போருக்கு மட்டிலே" என்று வரையறை செய்து திட்டமிட்டு மரபு மீறல் நடைபெற்றுள்ளது. இவ்வாறு பாதிப்புக்கு இலக்காகியுள்ள 23 புதிய உதவிப் பொறியாளர்களுக்கும் ஊதிய விகிதப் பலனை நீட்டித்து மரபு காக்குமாறு மதிப்பிற்குரிய மின் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களையும் மற்றும் அனைத்து இயக்குநர்களையும் த.நா.மி.வா. பொறியாளர் கழகத்தின் பொதுக் குழு கனிவுடன் வேண்டுகின்றது.

**தீர்மானம். (11):**

தமிழ் நாடு மின்சார வாரியம் உருவாக்கப்பட்ட நாளிலிருந்து ஒவ்வொரு முறையும் ஊதிய விகிதத் திருத்தத்தின்போது பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகிய இரு வகையினருக்கும் ஒரே நேரத்தில் திருத்தம் செய்வது தொன்று தொட்டு கடைபிடிக்கப்படும் மரபு ஆகும். ஏனைய மின்சார வாரியங்களிலும் இரு வகையினருக்கும் ஒரே நேரத்தில் தான் திருத்தம் செய்யப்படுகிறது. ஆனால் இம்முறை அலுவலர்கள் தனிமைப் படுத்தப்பட்டு "இதுவே கடைசி; இனி இல்லை." என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மரபு மீறிய அறிவிப்பை திரும்பப் பெறுவதுடன் இனி வருங்காலங்களில் இரு வகையினருக்கும் ஒரே நேரத்தில் ஊதிய விகிதத் திருத்தம் நடைபெறும் என்று உறுதி செய்து (Per) FB TANGEDCO Proceedings No.14 நாள்: 24.05.2023 என்ற வாரிய ஆணைக்கு தகுந்த திருத்தம் வெளியிடுமாறு மதிப்பிற்குரிய மின் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களையும்

மற்றும் அனைத்து இயக்குநர்களையும் த.நா.மி.வா. பொறியாளர் கழகத்தின் பொதுக் குழு கனிவுடன் வேண்டுகின்றது.

**தீர்மானம். (12):**
தமிழ் நாடு மின் தொடரமைப்புக் கழகத்தில் உள்ள 230 கி.வோ. துணை மின் நிலையங்களில் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டில் உள்ள 62 செயற் பொறியாளர்கள்/ இயக்கம் பணியிடங்களையும் 110 கி.வோ. துணை மின் நிலையங்களில் ஒப்புதலாகி பயன்பாட்டில் உள்ள 220 உதவிப் பொறியாளர்கள் பணியிடங்களையும் இரத்து செய்து (Per) FB TANGEDCO Proceedings No.4 நாள்: 05.03.2024 என்ற வாரிய ஆணை வழங்கப்பட்டுள்ளது. விஞ்ஞானம் சார்ந்த திறனாய்வு ஏதுமின்றி தொழில் நுட்பத் தணிக்கை ஏதுமின்றி எடுக்கப்பட்ட இத்தகைய விபரீத முடிவு மின் கட்டமைப்பின் சீர்குலைவுக்கும் எண்ணிலடங்கா மின் தடங்கல்களுக்கும் வழி வகுக்கும் என்பது திண்ணம். (Per) (FB) TANTRANSCO Proceedings No. 31 நாள்: 10.07.2012 என்ற வாரிய ஆணையின் அடிப்படையில் ஒப்புதலாகி பல்லாண்டுகளாக பயன்பாட்டில் உள்ள மேற்காணும் அனைத்து பதவிகளையும் தொடர்ந்து அனுமதித்து 05.03.2024 நாளிட்ட வாரிய ஆணை எண்: 4-யை இரத்து செய்து ஆணை பிறப்பிக்குமாறு **போற்றுதலுக்குரிய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களையும்** மதிப்பிற்குரிய மின் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களையும் மற்றும் அனைத்து இயக்குநர்களையும் த.நா.மி.வா. பொறியாளர் கழகத்தின் பொதுக் குழு கனிவுடன் வேண்டுகின்றது.

**தீர்மானம். (13):**
அண்மைக் காலமாக முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அப்பழுக்கற்ற முறையில் அறம் சார்ந்த நெறியில் பணியாற்றி பணியை நிறைவு செய்யும் நிலையை அணுகும் மூத்தப் பொறியாளர்கள் பால் புற்றீசல் போன்று பொய்ப் புகார்களை வாரியத்திற்கு சற்றும் தொடர்பில்லாதவர்கள் அனுப்பி அவர்களின் அமைதியை குலைத்து ஆனந்தம் காண்கின்றனர். வெற்று ஈனர்களின் வீண்பழியை நிராகரித்து முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக எந்தவிதமான புகார்களுக்கும் இடமளிக்காமல் பணியாற்றி பணியை நிறைவு செய்யும் நிலையில் உள்ள நேர்மையான பொறியாளர்களை பாதுகாக்க வேண்டியது மின் கழகத்தின் கடமை ஆகும். தவறு இழைக்கும் பொறியாளர்களை ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தி கடுமையான தண்டணை வழங்குவதில் பொறியாளர் கழகமும் உவந்து உடன்பாடு தெரிவிக்கின்றது. எல்லா விதமான நடவடிக்கைகளும் ஒய்வு பெறும் நாளுக்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே முடிக்கப்பட வேண்டும் என்று பொறியாளர் கழகம் வலியுறுத்த விழைகின்றது. தமிழ் நாடு அரசு வெளியிட்டுள்ள

11.10.2021 நாளிட்ட அரசு ஆணை எண்.111 என்ற அரசு ஆணையைத் தழுவி மின் கழகம் உரிய ஆணை பிறப்பிக்குமாறும் பணி ஓய்வு நாளுக்கு முன்னதாக கடைசி மூன்று மாதங்களில் வருகின்ற புகார்களை ஒட்டுமொத்தமாக எவ்விதமான விசாரணையும் இன்றி பதிவு செய்ய வேண்டும் என்றும் **போற்றுதலுக்குரிய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களையும்** மதிப்பிற்குரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களையும் த.நா.மி.வா. பொறியாளர் கழகத்தின் பொதுக் குழு கனிவுடன் வேண்டுகின்றது.

**தீர்மானம். (14):**
ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், பணிக்கொடை, விடுப்பைக் காசாக்கிக் கொள்ளல் போன்ற சலுகைகள் தடங்கலின்றி கிடைத்திட தனியாக ஓய்வூதிய நிதியம் (Master Pension Trust) ஒன்றை நிறுவிட வேண்டும். தமிழ் நாடு அரசும் மின் கழகங்களும் தொடக்கத்தில் கணிசமான தொகையை கணக்கிட்டு முதலீடு செய்ய வேண்டும். தொடர்ந்து அனைத்து மின் கழகங்களும் தங்கள் கணக்கில் உள்ள அனைத்து பணியாளர்களுக்கும் உரிய ஓய்வூதியப் பங்களிப்புத் தொகையை (Pension component) கணக்கிட்டு ஓய்வூதியர் குழுமத்தில் மாதந்தோறும் செலுத்திட வேண்டும். அது போலவே வீதப்பட்டி மாற்றத்தின்போது (Tariff order) தமிழ் நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அனுமதிக்கும் ஓய்வூதியப் பங்கின் அடிப்படையில் எதிர்வரும் காலத்தில் விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு அலகு மின்சாரத்திற்கும் ஓய்வூதியப் பங்கை உரிய வகையில் கணக்கிட்டு ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்திட வேண்டும். மேற்காணும் நெறிமுறைகளை உள்ளடக்கி ஓய்வூதிய நிதியம் ஒன்றை அமைத்திட ஆணையிடுமாறு **போற்றுதலுக்குரிய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களையும்** மதிப்பிற்குரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களையும் த.நா.மி.வா. பொறியாளர் கழகத்தின் பொதுக் குழு கனிவுடன் வேண்டுகின்றது.

**தீர்மானம். (15):**
01.04.2003 முதல் புதிதாக நியமனம் செய்யப்பட்டு பணியில் சேர்ந்த அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் நடைமுறையிலுள்ள பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை இரத்து செய்துவிட்டு பழைய ஓய்வூதியத் திட்டத்தை விரைந்து அமுல்படுத்துமாறு **போற்றுதலுக்குரிய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களையும்** மதிப்பிற்குரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களையும் த.நா.மி.வா. பொறியாளர் கழகத்தின் பொதுக் குழு கனிவுடன் வேண்டுகின்றது.

**தீர்மானம். (16):**
01.04.2003 முதல் புதிதாக நியமனம் செய்யப்பட்டு பணியில் சேர்ந்த அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் தற்போது நடைமுறையில் உள்ள பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் நிதியை நிர்வகிக்க தனியாக பங்களிப்பு ஓய்வூதிய நிதியம் (CPS Trust) ஒன்றை உடனடியாக தொடங்குமாறும் தற்போது வரை பிடித்தம் செய்த பங்களிப்புத் தொகையையும் அதற்கு இணையான வாரியத்தின் பங்களிப்புத் தொகையையும் உரிய வட்டியுடன் நிதியத்தின் பராமரிப்புக்கு ஒப்படைக்குமாறும் வேண்டுகின்றோம். மேலும் ஆண்டு கணக்குச் சீட்டு சில வட்டங்களில் முறையாக வழங்கப்படுவதில்லை என்று கூறப்படுகிறது. அக்குறைபாட்டைக் களைவதுடன் தமிழ் நாடு மின் கழக வலை தளத்தில் மின் கழகப் பணியாளர்களும் ஆண்டு கணக்குச் சீட்டினை நகலெடுக்கும் வசதியை உருவாக்கித் தர வேண்டும் என்று வேண்டுகின்றோம். பணியை நிறைவு செய்து ஓய்வு பெறுகின்ற மற்றும் இயற்கை எய்துகின்ற பங்களிப்பு ஓய்வூதிய சந்தாதாரர்களுக்கும் பணிக் கொடையை வழங்க வேண்டுமென்று வேண்டுகின்றோம். பொது வருங்கால வைப்பு நிதியிலிருந்து பகுதி இறுதித் தொகை (Part final withdrawl) மற்றும் கடன் (Loan) ஆகியன அனுமதிக்கப்படுவது போல பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திலிருந்தும் இரு வகை வசதிகளையும் அனுமதிக்க வேண்டும் என்று **போற்றுதலுக்குரிய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களையும்** மதிப்பிற்குரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களையும் த.நா.மி.வா. பொறியாளர் கழகத்தின் பொதுக் குழு கனிவுடன் வேண்டுகின்றது.

**தீர்மானம். (17):**
மின்னகம் கட்டுமான நன்கொடையாக ஒவ்வொரு உறுப்பினரும் குறைந்த பட்சம் ரூ.20,000/- நான்கு தவணைகளில் வழங்குமாறு த.நா.மி.வா. பொறியாளர் கழகத்தின் பொதுக் குழு தீர்மானிக்கிறது.

**தீர்மானம். (18):**
நீண்ட நாட்கள் நிலுவையில் உள்ள முக்கியமான கோரிக்கைகளான

- உதவிப் பொறியாளர் நேரடி நியமனம்,
- கால வரம்புக்குட்பட்ட பதவி உயர்வு,
- அனைத்து மின் கழகங்களிலும் பணியாற்றும் பொறியாளர்களுக்கும் பொதுவான மூப்புப் பட்டியல் (Common Seniority),
- (Per) FB TANGEDCO Proceedings No. 2, நாள்:12.04.2022 மற்றும் (Per) FB TANGEDCO Proceedings No.4 நாள்: 05.03.2024 ஆகிய வாரிய ஆணைகளை திரும்பப் பெறுதல்,
- புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை இரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்துதல்,

**Tamil Nadu Electricity Board Engineers' Association**
(Recognized in G.O. No.854 dated 06-04-1946)
Regn. No.217/94
"Electricity Avenue", 144, Anna Salai, Chennai - 600 002. Association : 044 28520731
E-mail : tnebea@gmail.com Web : www.tnebengineers.in

- ஓய்வூதியம் மற்றும் பங்களிப்பு ஓய்வூதிய நிதியம் ஆகிய இருவகைக்கும் தனித் தனியாக ஓய்வூதிய நிதியங்களை நிறுவுதல்

ஆகிய ஆறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ் நாடு அரசின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு

- 2024-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சென்னை தலைமை அலுவலகம் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகங்கள் முன்பு வாயிற் கூட்டங்கள் நடத்துவது என்றும்
- 2024-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் சென்னையில் கோரிக்கைப் பேரணி நடத்துவது என்றும்

த.நா.மி.வா. பொறியாளர் கழகத்தின் பொதுக் குழு தீர்மானிக்கிறது.

**தீர்மானம். (19):**

பொறியாளர் நல நிதியில் இணைந்துள்ள சந்தாதாரர்கள் பணியை நிறைவு செய்து ஓய்வு பெறும்போது நல நிதியின் புனித நோக்கத்தை கருத்தில் கொண்டும் நல நிதியின் நிதிவளம் காக்கும் பொருட்டும் அவர்கள் செலுத்திய சந்தாத் தொகையை இனி வரும் காலங்களில் திருப்பித் தருவத்தில்லை என்று த.நா.மி.வா. பொறியாளர் கழகத்தின் பொதுக் குழு தீர்மானிக்கிறது.

11/08/2024.

(வெ. சண்முகா)
பொதுச் செயலர்